செ.வெ.எண்.299 நாள்.07.05.2018.

# திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 32 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 12 பயனாளிகளுக்கு இலவச தேய்ப்பு பெட்டிகளையும், மூன்று பயனாளிகளுக்கு இழப்பீட்டு தொகை ரூ.7 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.05.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400/– மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் சேரன்மகாதேவி வட்டத்தைச் சார்ந்த 7 பயனாளிகளுக்கு தலா ரூ.60,000/– மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 12 பயனாளிகளுக்கு தலா ரூ.5,018/– மதிப்பிலான இலவச தேய்ப்பு பெட்டிகளையும், கடல் கடந்த இந்தியர் இறப்பிற்கான இழப்பீட்டுத் தொகையாக நாங்குநேரி வட்டம், இலங்குளத்தைச் சார்ந்த ஒரு நபருக்கு ரூ.2,88,083/–த்திற்கான காசோலையினையும், இராதாபுரம் வட்டம், வடக்கன்குளத்தைச் சார்ந்த ஒரு நபருக்கு ரூ.3,26,021/–த்திற்கான காசோலையினையும், நியூ ஹெல்த் இன்சூரன்ஸ் ஓய்வூதியரின் வாரிசுத் தொகையாக ஒரு நபருக்கு ரூ.78,600/–த்திற்கான காசோலையினையும் ஆக மொத்தம் 47 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியக்கோட்டி, உதவி ஆணையர் (கலால்) திரு.வி.பழனிக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (பொ) திரு.ராமசுப்பிரமணியன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.